**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 226/2021</u>**

நாள் 16.09.2025

DW1 – C.தங்கமணி

க/பெ – சின்னச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of September 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கின் 2-ம் பிரதிவாதி ஏற்கனவே அ.வ.எண்.99/2018 என்ற பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்து அதில் நாங்கள் 14.07.2018-ம் தேதியில் சமரச தீர்ப்பாணை பெற்றோம் என்றால் சரிதான். அந்த பாக தாவாவில் இந்த வழக்கு சொத்தும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்ட காலத்திற்கு முன்பாக எனது முன்னோர்கள் பெயரில் இருந்த வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதுபோல எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2019-ம் ஆண்டிற்கு பிறகு சொத்திற்கு எனது பெயரில் பட்டா இருந்தது என்பதை காட்ட அந்த பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என் பெயரை நீக்கி விட்டார்கள். அவ்வாறு பட்டாவில் எனது பெயரை நீக்கியது சம்பந்தமாக மேல்நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனு கொடுத்தேன் நீதிமன்றத்தில் வழக்கு நடப்பதால் நீதிமன்றத்திலேயே பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள்.

2. சொத்தில் எனக்கு உரிமையே இல்லாத நிலையில் எனது பெயரை இடையில் பட்டாவில் தவறாக சேர்த்து விட்டதை அறிந்து, விசாரித்து தான் எனது பெயரை பட்டாவில் இருந்து நீக்கி உத்தரவிட்டார்கள் என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துடன் தாவா சொத்தையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்து அதில் சமரச தீர்ப்பாணை பெற்று அதை வைத்து பட்டாவில் எனது பெயரை சேர்த்து விட்டேன் என்றும், அதை தெரிந்து தான் எனது பெயரை பட்டாவில் இருந்து நீக்கி விட்டார்கள் என்றும், அதனால் தாவா சொத்தில் எனக்கு எவ்வித பாத்திய உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்து வாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டு வாதிகளுக்கு தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நானோ, எனது முன்னோர்களோ எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவித்து வந்தது கிடையாது என்றால் சரியல்ல. அதனால், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.16 13:42:06 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**